# திருச்சி சிவா எம்.பி. பேச்சு

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

வரும். அது தொடர்புடையதாக இருக்கும்; தேவையானதாக இருக்கும்; எதிரே இருப்பவர்களின் நிலைமைகளை அனுசரித்து, பல்வேறு காரணங்களை அனுசரித்து, பேச்சின் நேரத்தை நான் அமைத்துக் கொள்ளலாம்" என்று நான் சொன்னேன்.

அதுபோல, இப்போது நான் திராவிட இயக்கம் அதன் வரலாறு என்று ஆரம்பித்தால், நீங்கள் சுருங்கச் சொன்னதை நான் விரித்து சொல்ல வேண்டும். முதல் பகுதி-திராவிட இயக்க வரலாற்றை சொல்வதற்கு எனக்கு 2 மணி நேரம் தேவை. இரண்டு பொழுதுகளாக, காலைப் பொழுது-மாலைப்பொழுது என்பதாக இது போன்ற வகுப்புகளை நடத்தி இருக்கிறோம். நான் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதவியாளரிடம் சொல்லி இருக்கிறேன். இப்போது அமைச்சர் சேகர்பாபு மூலமாகவும் சொல்லுகிறேன். யாழினி, பிரசன்னா-எல்லோர் மூலமாகவும் சொல்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் வைரங்கள். ஆனால் இன்னும் பல கோணங்களில் பட்டை தீட்டப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு வரலாறு சொல்லித் தரப்பட வேண்டும். இந்த இயக்கம் என்றால் என்ன? நம் கடமை என்ன? நம் வாழ்க்கை என்பது என்ன? எதை இழந்தால், எதை பெற முடியும்? பதவி அல்ல; பணம் அல்ல; பட்டம் அல்ல, இந்த நாட்டின் மானம்; மொழியின் பாதுகாப்பு; இந்த மண்ணின் மரியாதை; மொழி அதன் அடிப்படையில் இனம்; இனத்தின் அடிப்படையில் பண்பாடு, கலாச்சாரம்; அந்த அடிப்படையில் உணவு; அந்த அடிப்படையில் உடை; அந்த அடிப்படையில் நம் அணுகுமுறை என்று பார்ப்பீர்களேயானால், ஆரம்பத்திலே அடித்தளத்தில் முடியும்.

தந்தை பெரியார் அவர்கள், இறை மறுப்பு கருத்து கொண்டவர். அது பல பேருக்கு புரியாமலே பேசுவார்கள். 'பெரியார் கடவுள் இல்லை என்று சொல்கிறார், பின்னர் ஏன் ஆலயப் பிரவேசம் கேட்கிறார்' என்று கேட்டார்கள். எல்லோருக்கும், குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு ஆலயத்தில் அனுமதி வேண்டும் என்று, ஆலயப் பிரவேசம் வேண்டும் என்று சொல்கிறார். 'நீங்கள்தான் கடவுளே இல்லை என்கிறீர்களே... பின்னர் ஏன் அவர்களுக்கு உரிமை கேட்கிறீர்கள்' என்று கேட்டபோது சொன்னார், "எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லையே தவிர, இருக்கிறவர்களுக்கு உள்ளே செல்கிற உரிமை வேண்டும்" என்கிறார். தொழுவதற்குத்தான் உரிமை கேட்டான். ஆனால் தொடுவதற்கே இப்போது உரிமை தந்து இருக்கிற அரசாங்கம், நம்முடைய தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்களின் அரசாங்கம். அந்தக் கடமையை ஏற்று நடத்துகிற, அவருடைய தளகர்த்தராக மாவட்டச் செயலாளர் சேகர்பாபு அந்தத் துறையின் அமைச்சர்.

### அனைத்து சாதியினரும் அர்ச்சகராக உரிமை!

ஒரு காலத்தில் நந்தனார் என்பவர், சிதம்பரம் நடராஜர் பெருமானின்மீது இருக்கிற பக்தியின் காரணமாக, அங்கே செல்கிறான். அங்கே ஆலயத்தில் நுழைவதற்கு மற்றவர்கள் அனுமதித்தவர்களோ இல்லையோ, அங்கே இருக்கும் நந்தியே வழிமறித்தது என்று புராணம் சொல்கிறது. அப்படி புராணத்தில் என்ன சொல்லப்படுகிறது என்று சொன்னால், அந்த நந்தியினை சிவபெருமான் காட்சி தந்து, 'சற்றே விலகும் பிள்ளாய்' என்று காட்சி தருகிறார். அப்போது வாதிட்ட சமயங்களில் மதங்களில் கடவுளில் நம்பிக்கை உடையவர்கள் சொன்னார்கள், 'சில மனிதர்கள் வேண்டுமென்றால் சாதி வேற்றுமை பார்க்கலாம், ஆனால் சிவபெருமானுக்கு இல்லை. அதனால்தான் அவர் நந்தியை விலக சொல்லிவிட்டு நந்தனுக்கு காட்சி தந்தார். அவருக்கு தெரியும், அவனின் பக்தியை பற்றி' என்று சொன்னார்கள். பதில் சொல்ல முடியவில்லை பலரால். காரணம், இது சரியான வாதமாக இருந்தது. எப்போது வரை என்றால், கலைஞர் என்ற தலைவர் பேச ஆரம்பிக்கும் வரை. கலைஞர் பேச ஆரம்பிக்கும் போது கேட்டார், 'நந்தனை வழிமறித்த நந்தியை சற்று விலகும் பிள்ளாய் என்றுதான் சிவபெருமான் சொன்னாரே தவிர, நந்தனை உள்ளே வா என்று அழைக்கவில்லை'. பெரியார் மறைகிற போது சொன்ன ஒரே ஒரு வார்த்தை, நிறைவேறாத என்னுடைய ஆசை நெஞ்சிலே முள்ளாக இருக்கிறது என்று சொன்னது, ஆலயங்களில் அனைவருக்கும் அர்ச்சகராக உரிமை இன்னும் நிறைவேறவில்லையே. அவருடைய ஆதங்கங்கள் பலவற்றை கலைஞர் நிறைவேற்றி இருக்கிறார். அண்ணாவும் - கலைஞரும் பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தப் பட்டப்பாடு-எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்ச நஞ்சமல்ல.

தி.மு.க. என்ற கட்சி தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்தை கைப்பற்றி தங்களின் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்கான கட்சி அல்ல. மாறாக, கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பாதையாக - அதற்கான வாய்ப்பாக கருதியது. பெரியாரிடம் இருந்து கருத்து வேறுபாடு கொண்ட அண்ணா கழகத்தை தொடங்குகிறார். சில நாட்களில் அதை அரசியல் இயக்கமாக மாற்றுகிறார். அந்த அரசியல் இயக்கம் தேர்தலில் போட்டியிடலாமா? வேண்டாமா? என்று கழகத் தோழர்களை கூட்டிவைத்து- ஒரு மாநாடு நடத்தி வாக்கெடுப்பு நடத்தி-ஜனநாயக ரீதியாக தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவெடுக்கிறார்கள். விலகி நிற்கிறார் பெரியாரிடமிருந்து பல காலம். அப்படி விலகி நிற்கின்ற நேரங்களில் பெரியார் கடுமையாக அண்ணாவை விமர்சிக்கிறார். ஆனால், அண்ணா பதிலுக்கு ஒரு வார்த்தைகூட பேசவில்லை. பேசவில்லை என்பதைவிட கழகம் தொடங்கியபோது, நாற்காலியை காலியாக வைக்கச் சொன்னார். இந்தக் கட்சியில் தலைவர் என்ற பொறுப்பு காலியாக இருக்கும். அது பெரியாருக்கான நாற்காலி. நான் கண்டதும்-கொண்டதும் ஒரே தலைவர், பெரியார்தான் என்று சொன்னார்.

### சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும்!

ஒரு மொழிப் போராட்டத்தில் கைதாகி பெரியாரும்-அண்ணாவும் சிறையில் அடுத்தடுத்த அறையில் இருக்கிறார்கள். பேசிக்கொள்ளவே இல்லை. ஆனால், பெரியார் அண்ணாவிற்கு சில ரொட்டிகளை கொடுத்து அனுப்புகிறார். இப்படி எல்லாம் இருந்த நிலை மாறி, அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார். முதலமைச்சர் ஆனதற்குப் பின்னால் திருச்சியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பெரிய தலைவர் தோழர் பா.ஜீவானந்தம் அவர்களுடைய மகள் திருமணம் பெரியாரின் தலைமையில் நடைபெறுகிறது. ஜீவானந்தம் அவர்களும் ஒரு காலத்தில் நம்முடைய இயக்கத்தின்பால் ஈடுபாடு கொண்டவர்தான். வ.உ.சிதம்பரனார் கூட பெரியாரின் கொள்கைகளைப் பார்த்து பாராட்டி அவரோடு தொடர்கிறேன் என்று விருப்பப்பட்டவர்தான். அப்படிப்பட்ட அந்த ஜீவாவின் மகள் திருமணத்திற்கு பெரியார் தலைமை. அதில் முதலமைச்சராக அண்ணா கலந்துகொள்கிறார். நீண்ட நாட்கள் கழித்து கலந்து கொள்கிறார். அதற்கு முன்னால் வெற்றி பெற்றவுடனேயே அண்ணா நேராகச் சென்றது, பண்பாடு, பண்பு நலன் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, தன்னுடைய வீட்டிற்கு செல்லவில்லை திருச்சியில் இருந்த பெரியாரை பார்க்கச் செல்கிறார். பெரியார் அவரைப் பார்த்து நீண்ட நேரம் தலை குனிந்து கொண்டே உட்கார்ந்திருந்தார். எந்தத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெறக் கூடாது என்ற வாதிட்டோமோ, அந்த கழகம் வெற்றி பெற்றவுடன் நம்மைப் பார்த்து இந்த ஆட்சியை உங்களுக்கு காணிக்கை என்று சொல்ல அண்ணா வந்திருக்கிறாரே, எவ்வளவு பெருந்தன்மை. அந்த வகையில்தான் இந்தத் திருமணத்திலும் அண்ணா கலந்து கொள்கிறார் முதலமைச்சராக. அதில் அண்ணா பேசுகிறபோது சொல்கிறார், 'பெரியார் என்பவர் ஒரு ஆசிரியரைப்போல, அவரிடம் பயில்கிற மாணவர்கள் உயர்ந்த நிலைக்கு சென்று விடுவார்கள். ஆனால் ஆசிரியர் அதே இடத்தில்தான் இருப்பார். மாணவர்களின் வளர்ச்சியை பார்த்து பரவசப்பட்டுக் கொண்டு. மாணவர்கள் தங்களுடைய ஆசிரியர்களுக்கு குரு தட்சணை தர வேண்டும். நான் அவரிடம் பயிற்சிப் பெற்றவன். தோழர் ஜீவா அவர்களும் அவருடைய மாணவர்தான். நான் முதலமைச்சர். எனவே, என்னுடைய குருவிற்கு தலைவருக்கு நான் ஒரு பரிசு தர விரும்புகிறேன். என்ன பரிசு தெரியுமா? நீண்ட நாட்களாக அவர் மனதில் கொண்டிருந்த சுயமரியாதைத் திருமணத்தை நான் சட்ட ரீதியாக ஆக்கப்போகிறேன். சொன்னவுடன், பெரியார் எழுந்து நின்று கைகூப்பி தலை குனிந்து வணங்கி, 'ரொம்ப நன்றி ஐயா' என்று கண்கலங்கி நின்றார் என்று சொல்லுவார்கள்.

### நீதிமன்றத்தின் அதிர்ச்சித் தீர்ப்பு!

ஏன் அப்படி கண்கலங்கினார்? இங்கே கேள்வி கேட்க நான் தயாராக இல்லை. நீங்கள் எல்லாம் இளைஞர்கள். யாருக்கும் திருமணம் ஆகியிருக்க வாய்ப்பு இல்லை. பெரும்பாலும் இன்றைக்கு சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட தோழர்கள் நம்மிடம் பல பேர் இருக்கிறார்கள். வைதீக முறையில் நடத்தப்படும் திருமணத்திற்கு எதிர்ப்பு என்பது அல்ல. அதில் சமஸ்கிருதமொழியில் மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. அந்த மந்திரங்களின் பொருள் மணமக்களுக்கு புரியாது; அழைத்து வந்த பெற்றோருக்கு தெரியாது; ஏன் பேசுகிறவர்களுக்கே சில நேரங்களில் தெரியாது; மனப்பாடம் செய்து வந்து சொல்லிக் கொண்டிருப்பார். அதில் இருந்த கருத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றவுடன் எளிமையாக -நம்முடைய மொழியில் மணமக்களுக்கு தேவையான வாழ்த்து என்ற முறையில் அறிவுரைகள் சொல்லலாம் என்ற முறையினை பெரியார் ஏற்படுத்தினார். இது நன்றாக இருக்கிறதே என்று பலர் தங்களுடைய மண விழா வாழ்வை ஏற்றுக் கொண்டார்கள். நாட்கள் நகர்கின்றன. அப்படி செல்கிறபோது, அப்படி திருமணம் செய்து கொண்ட ஒரு தம்பதியர்களுக்கு பிறந்த பிள்ளைகளுக்கு சொத்து தகராறு. நீதிமன்றத்திற்கு சென்று எங்கள் பெற்றோருடைய சொத்துக்களை பிரித்துக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வழக்கை விசாரித்து நீதிமன்றம் என்ன சொன்னது தெரியுமா? நீங்கள் யாருடைய சொத்தை பங்கு கேட்டு வந்திருக்கிறீர்களோ, அவர்கள் உங்களுடைய தாய் - தந்தையர் அல்ல. ஐயா இது என்னுடைய பிறப்புச் சான்றிதழ். இவர்களுக்குத் தான் பிறந்தேன் என்ற சான்றிதழ் இருக்கிறது. அதற்கு நீதிமன்றம் சொன்னது, நீங்கள் அவர்களுக்கு பிறந்திருக்கலாம் அவர்கள் இருவரும் கணவன்- மனைவியே இல்லை. இல்லை, திருமணத்திற்கான சான்று இது. புகைப்படங்கள் இருக்கிறது. இதோ பாருங்கள், ஒரு தலைவர் மாலை எடுத்துக் கொடுக்கிறார். பல பேர் கூடி இருக்கிறார்கள். நீங்கள் நடத்தியது திருமணம் என்று சொல்லலாம். அது உங்கள் மனம் ஏற்றுக் கொண்டது. ஆனால் சட்டம் ஏற்றுக் கொள்ளாது. இந்து திருமணத்தைச் சட்டப்படி, ஒரு திருமணம் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும் என்றால், அக்கினி வளர்க்க வேண்டும்; மணமக்கள் ஏழு முறை வலம் வர வேண்டும்; மந்திரங்கள் ஓத வேண்டும்; சில சடங்குகள் சம்பிரதாயங்கள் இருக்கின்றன; அது இல்லாத எந்தத் திருமணமும் இந்து திருமணச் சட்டப்படி செல்லாது. எனவே, இவர்களின் திருமணமும் செல்லாது. பெற்றோர் என்பதை ஏற்க முடியாது. 'It's an illegal marriage'. சேர்ந்து வாழ்ந்த ஆணும் பெண்ணும் என்பதாகத்தான் கருதப்படுமே தவிர, சட்ட ரீதியான கணவன் மனைவி இல்லை என்ற தீர்ப்பு. அதிர்ச்சித் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பு வந்தது 50களில். அதற்குப் பின்னால் பெரியார் மனம் நொந்து போயிருந்தார். ஆனால் மனம் மாறாத பல பேர் அதே வகையில் திருமணம் செய்து கொள்கிறார்கள். அனைத்துத் திருமணங்களும் செல்லாத திருமணங்கள் சட்டப்படி. அதற்குத்தான் அண்ணா சொல்கிறார், 'ஆட்சிக்கு வந்தவுடன் நான் உங்களுக்கு தரும் பரிசு, சுயமரியாதைத் திருமணத்தை செல்லுபடியாக ஆக்கப்போகிறேன்'. இப்போது புரிகிறதா... எதற்கு அதிகாரம் என்று- எதற்காக ஆட்சி என்று.

இன்றைக்கு ஆளும் கட்சி. ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சி -ஆளுங்கட்சி என்ற வரிசையில் மாறி மாறி உட்கார வேண்டிய சூழல் ஏற்படும். தவிர்க்க முடியாது. அவசர நிலைக்குப் பின்னால், 13 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் கலைஞர் கழகம் நடத்தியிருக்கிறார். அதற்குப் பின்னால் 91-இல் ஒரு தேர்தலின் போது கலைஞர் மட்டுமே வெற்றி பெற்றார். 233 தொகுதிகளிலும் தோற்றுப்போனோம். அப்போதும் கழகம் நின்றது. எனவே, இளைஞர்களே... மாணவ தம்பிமார்களே... தங்கைகளே... உங்களுக்குச் சொல்வது, ஆளுங்கட்சியாக இன்றைக்கு அமைச்சராக இருந்து நடத்துகிறவர் அல்ல. ஒரு மாவட்டச் செயலாளராக - களத்தில் ஒரு போர் வீரனாகவும் சேகர்பாபு நிற்பார். அப்போதும் நீங்களும் நிற்க வேண்டும். நாங்களும் நிற்போம்.

### கலைஞர் என்பவர் ஒரு போராளி!

என்னுடைய அரசியல் பிரவேசம் என்பது, நான் தேர்தலில் போட்டியிட்டதன் மூலமாக அல்ல, நான் எம்.ஏ. படிக்கிறபோது, அவசரக் காலத்தில் ஓராண்டு காலம் மிசாவில் சிறையில் அடைபட்டேன். நம்முடைய கழகத்தின் தலைவர் என்னைவிட வயதில் மூத்தவர், இரண்டு ஆண்டு. அவர் திருமணமாகி சென்னை சிறையில் இருக்கிறார். நான் திருச்சி சிறையில் இருக்கிறேன். அவருடைய அரசியல் பயணம் வீறு கொண்டு வேகமாக ஆரம்பித்தது. அதற்கு முன்பே, அவர் இளைஞர் அணிக்கு என்று ஒரு அமைப்பை முயற்சித்தது எல்லாம் ஒரு கதை. ஆனால், அவசர நிலை காலம் என்பது மிக முக்கியம். அந்தப் போராட்ட உணர்வு என்பது உள்ளத்தில் இருக்கிற காரணத்தினால்தான் எப்போதும் - எந்த சோதனை வந்தாலும், தயங்குவதில்லை-பின்வாங்குவதில்லை என்பதை கலைஞரிடமிருந்தும் உள்வாங்கிக் கொண்டோம். உங்களுக்குத் தெரிந்த கலைஞர் முதலமைச்சராக- ஒரு கட்சியின் தலைவராக அறிந்திருப்பீர்கள். ஆனால், அடிப்படையில் கலைஞர் என்பவர் ஒரு போராளி. அடிக்காலிட்டுக் கொள்ளுங்கள். கலைஞர் என்பவர் போராளி. எல்லோரையும் முன்னுக்கு அனுப்பிவிட்டு உட்கார்ந்து கொண்டு என்ன என்று கேட்பவர் அல்ல. நான் முன்னால் செல்கிறேன். வருகிறவர்கள் என்னைத் தொடருங்கள். அவசர நிலையின்போது கடிதம் ஒன்று எழுதுகிறார். வீரர்கள் தொடரட்டும். கோழைகள் விலகட்டும். எல்லோரும் ஒடிக்கொண்டிருந்த நேரம். ஒற்றை மனிதனாக, மேடைகளில் பேசுகிற வாய்ப்பு மறுக்கப்பட்ட நிலையில், 'முரசொலி'யில் தான் விரும்பியதை எழுத முடியாத தணிக்கை இருந்த நிலையில் ஒற்றை மனிதனாக நின்று, இந்தக் கட்சியை கொள்கையை காப்பாற்றியவர் கலைஞர்.

ஒரு சின்ன தகவல் சொல்கிறேன். அவசர நிலை காலத்தில் ஒரு செய்தி பரவுகிறது. அதை நான் வதந்தி என்று சொல்ல மாட்டேன். ஒரு செய்தி பரவுகிறது. என்ன செய்தி? பிராந்திய கட்சிகள் -மாநில கட்சிகள் தடை செய்யப்படும் என்பதுபோல ஒரு செய்தி. அப்போது நிறைய தடை செய்யப்படுகின்ற நேரம். அந்தச் சூழலில் அ.தி.மு.க. என்ற இருந்த கட்சியின் பெயரை எம்.ஜி.ஆர். அ.இ. -அகில இந்திய என்று சேர்த்து அகில இந்திய அ.தி.மு.க. என்று மாற்றுகிறார்.

### 'திராவிட மாடல்' என்றால் எல்லோருக்கும் எல்லாம்!

நான் இந்த ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நிறைய சொல்லலாம், அவசியத்தின் காரணமாக நான் என் பேச்சை சுருக்கிக் கொள்கிறேன். நம்முடைய இயக்கத்தின் பெயர் என்ன? திராவிட முன்னேற்றக் கழகம். இது எதிலிருந்து வந்த அரசியல் இயக்கம்? திராவிடர் கழகம் என்ற ஒரு அமைப்பு. இதே ஒரு பாசறை கூட்டமாக இருந்தால், நான் பேசுகிற முறை வேறாக இருக்கும். இது வேறு மாதிரியான கூட்டம் என்பதால், நான் உரையாகவே இதை வைக்கிறேன். இல்லாவிட்டால் உங்களுடைய சிந்தனைகளை கிளறுகின்ற சில கேள்விகளின் மூலமாக நமக்கு இங்கே கலந்துரையாடலாக நடக்கும். திராவிடர் கழகம் என்ற சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு அரசியல் இயக்கம் உதயமாகிறது. இந்தப் பெயரை அண்ணா சூட்டியபோது அவருடன் இருந்த சிலர் சொன்னார்கள், திராவிடர் கழகம் என்றால் திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று தானே இருக்க வேண்டும், ஏன் நீங்கள் இப்படி வைத்தீர்கள் என்று கேட்டபோது அண்ணா சொன்னார், 'திராவிடர் கழகம் என்பது உலகம் எங்கிலும் பரந்த கிடக்கும் திராவிடர்களின் உரிமைகளுக்காக உண்டான ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம். நம்முடையது அரசியல் இயக்கம். திராவிடம் என்ற இந்த பூலோகப் பகுதிக்குள் வாழும் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான ஒரு இயக்கமாக இது இருக்கும்' என்றார். அதைத்தான் இன்றைய கழகத்தின் தலைவர் அண்ணன் தளபதி சொல்கிறார், 'திராவிட மாடல் என்று சொன்னால், எல்லோருக்கும் எல்லாம்'. சில பேர் சித்தரிப்பார்கள். நீங்கள் யாருக்கோ எதிரி என்பார்கள், அல்ல.

நேற்றைக்கு 13 பேருக்கு அர்ச்சகர்கள் என்ற வேலைவாய்ப்பு உரிமையை மாதம்தோறும் அவர்களுக்கு சம்பளம் உண்டு; மரியாதை உண்டு என்ற உத்தரவை தந்துவிட்டு, அமைச்சர் பொறுப்பில் அறநிலையத்துறை அமைச்சர் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறார். அந்த 13 பேரில் ஆதிதிராவிடர்கள் இருக்கிறார்கள். பெண்கள் இருக்கிறார்கள். சில பேருக்கு அதில் கோபம். இந்த 13 பேருக்கு வேலை கொடுத்த காரணத்தால், ஏற்கனவே அர்ச்சகர்களாக இருந்தவர்களை வெளியே போ என்று சொல்லி இருந்தால்தான் கோபப்படலாம். ஆனால், நாங்கள் அதைச் செய்யவில்லை. இவர்களையும் சேர்த்து உள்ளே அனுப்புகிறோம். அதுதான் இன்றைய திராவிட மாடல். அதைத்தான் அண்ணா அன்றைக்கே சொன்னார், 'எல்லோருக்குமான இயக்கமாக இது இருக்கும்'. எனவே, ஒரு பூகோலப் பகுதிக்கு உட்பட்ட இயக்கம், திராவிடம். அதில் அனைத்து இந்தியா என்று சொன்னால், அது என்ன பெரிய பூனை போவதற்கு ஒரு துளை, சின்ன பூனை போவதற்கு ஒரு துளை என்பதைப்போல.

விமர்சனங்கள் வந்தன. அப்போது நான் சிறைப்பட்டு சிறையில் இருந்தேன். கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் கோ.சி. மணி அவர்களிடம் கேட்டேன், 'நம்முடைய கட்சிப் பெயரும் மாறுமா?'. அதற்கு அவர் சொன்னார், 'தம்பி எனக்கு சட்டம் எல்லாம் தெரியாது. நடைமுறை தெரியாது. ஆனால், கலைஞரைத் தெரியும். கலைஞர் என்ற தலைவர் இருக்கும் வரை கட்சியின் பெயர் மாறாது. 'அவசர நிலை காலம் - 'நெருப்பாற்றில் ஒரு மெழுகுவர்த்தி மனிதன் நீந்தியதைப்போல ஒரு காலம்' என்று கலைஞர் சொன்னார். அப்படி நடத்தி இந்த இயக்கத்தை காப்பாற்றி, மீண்டும் ஆட்சி கட்டிலில் அமர்த்தி மறுபடியும் எதிர்க்கட்சியாக மாறி, ஆனால் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகிற கட்சியாக விளங்குகிறது கழகம்.

### பெண்களுக்கு சொத்தில் உரிமை!

இரு மொழிக் கொள்கை அண்ணா கொண்டு வந்தது. தமிழ்நாட்டில் இந்தி என்பதே கிடையாது என்பதை சட்டமன்ற தீர்மானத்தின் மூலம் அண்ணா கொண்டு வந்தார். இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்ற பெயர் சூட்டி அழகு பார்த்தார். கலைஞர் செய்தவை கொஞ்ச நஞ்சம் அல்ல. பெண்களுக்கு உரிமை-இளைஞர்களுக்கு வாழ்வு மொழிக்கு பாதுகாப்பு என்று அடுக்கடுக்காக அவர் செய்த சாதனைகளில் ஒன்றுதான், இங்கே தம்பி ஒருவர் பேசியதைப்போல பெண்களுக்கு பிறந்த வீட்டு சொத்தில் உரிமை உண்டு என்பது. இதெல்லாம் கற்பனையில்கூட செய்து பார்க்க முடியாதவை. உலகத்தில் முதன்முதலாக பெண்களுக்கு பெற்றோர்களின் சொத்தில் – மூதாதையர்களின் சொத்தில் பங்கு தரப்பட வேண்டும் என்று சொன்னவர் நபிகள் நாயகம், பல நூற்றாண்டுகளுக்கு முன்னால். அதற்குப் பின்னால் அந்தக் குரலை ஒலித்த ஒரே தலைவன், தந்தை பெரியார் மட்டும்தான். 1929-இல் செங்கல்பட்டு மாநாடு பெண்கள் மட்டுமே நடத்திய மாநாடு. அந்த மாநாட்டில்தான் ஈ.வெ.ரா என்று இருந்த வரை பெரியார் ஈ.வெ.ரா. என்று, பெரியார் என்ற பட்டத்தை தந்தது அந்த மகளிர் மாநாடு. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, பெண்களுக்கு மூதாதையர்கள் சொத்தில் பங்கு வேண்டும் என்பது. நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1929. 60 ஆண்டுகள் மனதிற்குள்ளேயே வைத்து காத்திருந்து, 89-இல் முதலமைச்சரானவுடன் கலைஞர் செய்த காரியம் அது. இன்றைக்கு இந்தியா முழுவதும் இருக்கிறது. ஆனால் தொடக்கம் புள்ளி என்பது கலைஞர் தான்.

### திருவள்ளுவர் தமிழனின் மானம் - அடையாளம்!

இன்றைக்கு நம்முடைய தலைவர் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். திருவள்ளுவர் சிலை நிறுவி 25- ஆண்டு -வெள்ளி விழா நடைபெறப்போகிறது. கழகம் தோன்றி 75 ஆண்டுகள். வள்ளுவர் சிலை வைத்து 25 ஆண்டுகள். பெருமையோடு சொல்கிறோம். ஆனால், அந்த இடத்தில் எப்படி அந்தச் சிலை வந்தது? சிந்தனை. குமரி மாவட்டத்திற்கு கூட்டத்திற்கு செல்கிறபோதெல்லாம், கூட்டம் முடித்துவிட்டு கடற்கரை ஓரத்தில் போய் உட்கார்ந்து நானும் - தளபதி போன்றவர்களும் ஒரு காலத்தில் பேசியிருக்கிறோம். காரணம், கலைஞர் செய்ததை எல்லாம் நாங்கள் செய்தோம். அவர் அனைத்துக் கூட்டங்களும் முடிந்தவுடன் அப்படித்தான் செல்வார். அப்படி சென்றபோது, ஒரு முறை பேசிக் கொண்டிருக்கிறவர் அமைதியாகி விடுகிறார். உடன் இருப்பவர்கள் ஏதோ சிந்தனையில் இருக்கிறார் என்ற போது, எழுந்து நிற்கிறபோது, 'இந்த ஊரில் நான் ஒரு சரித்திரத்தை உருவாக்கப்போகிறேன்' என்று சொன்னார். என்ன சரித்திரம்? இந்தப் பக்கம் பார்த்தால் விவேகானந்தர் பாறை. விவேகானந்தருக்கு நினைவு சின்னம் அங்கு. எனவே, தமிழ்நாடு இந்தியாவின் தென்கோடியில் இருக்கும் குமரிமுனை - முக்கடல்கள் சங்கமாகும் இடத்தில் மேற்கு வங்காளத்தில் இருந்து உலக அளவில் புகழ் பெற்ற விவேகானந்தருக்கு சிலை. கலைஞரின் மனது என்ன செய்தது என்றால், இந்த பக்கம் இருக்கும் பாறையைப் பார்க்கிறார். உயரமான பாறை எது. அலைகள் வந்து சேதப்படுத்தாதது எது என்பதைப் பார்த்து மனதில் பதிய வைத்துக் கொண்டு, சரியாக காத்திருந்து முதலமைச்சரானவுடன் இந்த விவேகானந்தர் நினைவிடத்தைவிட உயரமான 133 அடி திருவள்ளுவர் சிலை வைக்கிறார். ஏன்? நீங்கள் இன்றைக்கு இந்திய நாட்டின் வலைதளத்தில் பார்த்தால், இந்தியாவின் சிறப்புகள் என்ன என்று காட்டுகிற போது, அதில் வரப்படுகின்ற தாஜ்மஹால் போன்றவையோடு காட்டப்படுவது திருவள்ளுவரின் சிலை. வைத்தது தி.மு.க., நடைபெறுவது பா.ஜ.க. ஆட்சி. ஆனால் திருவள்ளுவர் சிலையை மறைக்க முடியாது. திருவள்ளுவர், தமிழின் அடையாளம் -தமிழனின் மானம் தமிழனின் அடையாளம். உலகத்தில் ஒரு மொழிக்காக - ஒரு இனத்திற்காக -ஒரு மதத்திற்காக ஒரு பிரிவினருக்காக என்று இல்லாமல், அனைத்து மனிதர்களுக்கும் என்று எழுதப்பட்ட முதல் மறை நூல். அது ஒன்றுதான் எங்கள் திருக்குறள். இந்தத் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் தமிழர். அதை போற்றி உயர்ந்த இடத்தில் வைப்பதற்காக தமிழனாக தமிழுக்காக பாடுபட்ட தலைவர் கலைஞர் செய்தார். இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்.

### இந்த இயக்கத்தை யாராலும் நெருங்க முடியாது!

பெரியார் சொன்னார். அண்ணா நிறைவேற்ற ஆரம்பித்தார். கலைஞர் தொடர்ந்தார். இன்றைக்கு தளபதி நம்முடைய ஆருயிர் அண்ணன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறார். தம்பி உதயநிதி ஸ்டாலின் அதை எடுத்துச் செல்கிற அடுத்த தலைமுறைக்கு தலைவனாக வலம் வருகிறார். அந்த முயற்சியும் அந்த கடமையும்தான் உங்களை எல்லாம் தேர்ந்தெடுத்தது. நீங்கள் ஏதோ ஒரு பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள் அல்ல. நான் இன்றைக்கு இங்கு சொல்லிவிட்டு செல்கிறேன். நாளைக்கு இந்த இயக்கத்தை நடத்தப் போகிறவர்களில் நீங்களும் ஒரு பகுதியினர். நீங்கள் உழைத்தால், உங்களை தகுதி உள்ளவர்களாக வளர்த்துக் கொண்டால், சோதனைகளைத் தாங்கிக் கொண்டால், என்னைப்போல் நாளை நீங்கள் நாடாளுமன்றத்திலும் இருக்கலாம், சட்டமன்றத்திலும் இருக்கலாம், பிரியாவைப்போல ஒரு மாநகராட்சியின் மேயராகவும் வரலாம். கழகம் சரியானவர்களை சரியான நேரத்தில் அங்கீகரிக்கும் என்பதை மட்டும் மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், உண்மை - கடினமான உழைப்பு-கொள்கையில் ஆழமான பற்று - அதில் தெளிவு- இது முதலில் வேண்டும் என்பதால்தான் நாளைக்கு சேகர்பாபு இளைஞரணிச் செயலாளரிடம் பேசுகிறபோது சொல்வார், 'அண்ணன் சிவா வந்தார்; பேசினார் என்றெல்லாம், அத்தோடு சேர்த்து சொல்லுங்கள், நான் ஏற்கனவே தெரியப்படுத்தி இருக்கிறேன். இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட 182 தோழர்களை மட்டும் வைத்து ஒரு நாள் முழுவதும் பயிற்சி முகாம் நடத்தப்பட வேண்டும். உங்களுக்கெல்லாம் பேச்சுத் திறமை இருக்கிறது; மேடையில் உங்களுக்கு அச்சமில்லை; மேடையில் ஏறியவுடன் கை, கால்கள் நடுங்கவில்லை; மாறாக, உங்களுக்கு ஆற்றொழுக்கான பேச்சு இருக்கிறது; மொழி நடை இருக்கிறது; கருத்துச் செறிவு இருக்கிறது; உங்களுக்கு கொள்கையின் அடித்தளம் மனதில் பதிய வைக்கப்பட்டால், இந்த இயக்கத்தை இப்போது போல எப்போதும் யாராலும் நெருங்க முடியாது.

### நாடாளுமன்ற - சட்டமன்றங்களில் உங்கள் குரல் ஒலிக்க வேண்டும்!

நான் கொள்கைப் பரப்புச் செயலாளர். நான் மாணவனாக பார்த்து, மேடை ஏற்றிவிட்டு, இன்றைக்கு பலரும் பார்த்து பாராட்டத்தக்க அளவில் வளர்ந்திருக்கும் தம்பி தமிழன் பிரசன்னா. அதுபோல, பிரபாகரன் இருக்கிறார்; கண்ணன் இருக்கிறார்; இன்னும் பல பேர். நீங்களும் அதுபோல என்று நான் சொல்கிறபோதுதான் சொல்வேன். ஆசை வார்த்தை காட்ட வரவில்லை. நாடாளுமன்றம், சட்டமன்றம் என்பது நாற்காலிகளை அலங்கரிக்கும் பொறுப்பு அல்ல. மாறாக, உரத்த குரலில் நம்முடைய உரிமைகளை முழங்கும் மன்றம் அது. டெல்லியில் பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறுகிறபோது, நான் கழகத்தின் உறுப்பினராக இருந்து பேசுகிறேன். எனக்கு அந்த இடத்தில் செல்வச் சீமான்களோடு சரிக்கு சமமாக இல்லை. இன்னும் தாண்டி முன்வரிசையில் உட்கார்ந்திருக்கிறேன். நாசுக்காக அவர்களுக்கு சொல்ல வேண்டிய கருத்துக்கள் இருக்கிறது.

சந்திரயான்-3 வெற்றிக்காக நடத்தப்பட்ட பாராட்டு விழா நேரத்தில் நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் அமித்ஷா இருக்கிறபோது நான் சொன்னேன், 'சந்திரன்1 வெற்றிக்கு காரணம் மயில்சாமி அண்ணாதுரை; சந்திரா3 வெற்றிக்கு காரணம் வீரமுத்துவேல் சங்கரன்; ஆதித்யா1 என்பது இன்றைக்கு சூரியனை ஆய்வு செய்ய சென்றிருப்பதற்கு காரணம் செங்கோட்டையில் இருக்கும் இஸ்லாமிய பெண் சாஜி என்பவர். இவர்களெல்லாம் தமிழர்கள். இவர்கள் உலக அளவில் இந்தியா – இஸ்ரோ அமைப்புற்கு பெருமை தேடித் தந்திருக்கிறார்கள் என்பது மட்டும் அல்ல Mr. Home Minister, இவர்கள் எல்லாம் அரசுப் பள்ளியில் தமிழ்வழி கல்விப் படித்தவர்கள். சமஸ்கிருதமும் தெரியாது; இந்தியும் தெரியாது என்று சொன்னதைப்போல் நாளைக்கு நீங்களும் முழங்க வேண்டும்.

அமைச்சர் சேகர்பாபு வந்து உட்கார்ந்தவுடன் சொன்ன செய்தி, நேற்றைக்கு தந்த அந்த அர்ச்சகர் வேலைக்கான உத்தரவை சொன்னார். எப்போதும்போல் நான் மனமகிழ்ந்தேன். அவரை நான் எப்போதும் வெளிப்படையாக, மனமார பாராட்டுகிறவன். காரணம், இலக்கு எது என்பதை தலைமை நிர்ணயிக்கிறபோது, அதை நோக்கி பாயும் அம்பாக அவர் செயல்படுகிறார். ஆனால் பார்ப்பவர்களுக்கு அது தெரியாது. அவர் ஆற்றுகின்ற பல சிறப்பான பணிகளில் இதுதான் நாம் சிலிர்க்க வேண்டியது; நாம் சிறப்பாக கருத வேண்டியது. ஆதிதிராவிடர்களை கொண்டு சென்று அர்ச்சகர்களாக்கி அவர்களையும், பெண்களையும் அந்த கற்பகிரகத்தில் நுழையச் செய்கிற கடமையை இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி செய்திருக்கிறது என்றால், இந்த ஆட்சியை பாதுகாக்க இவை தொடர துணை நிற்க வேண்டிய கடமை அடுத்த தலைமுறையினருக்கு இருக்கிறது. இது ஏதோ ஆட்களை இழுத்து உட்கார வைத்து வலுக்கட்டாயமாக எதையோ சொல்லிவிட்டு செல்கிற கூட்டம் அல்ல. உங்களுடைய மனதில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. சிந்திக்க வேண்டிய, அடுத்த தேர்தலில் மட்டும் அல்ல, வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வலிவோடும் – பொலிவோடும் நடைபெற வேண்டும் என்றால், மூத்தவர்களின் பின்னால் நாங்கள் நடைபோடுவோம்; இந்த இயக்கத்தின் கொடியை உயர்த்திப் பிடிப்போம்; திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்தியா முழுவதும் மீண்டும் வலிமை பெறுவதற்காக எங்கள் பணி தொடங்கும் என்று கிளம்புங்கள் தோழர்களே... எதிர்காலம் நம்முடையது, அது உங்களால்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. உரையாற்றினார்.